31 DEC 1996
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை (31-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 35

# அரசு நேர்மையுடன் நடந்திருப்பின் பிரச்சினை முன்னரே தீர்ந்திருக்கும்!

## தற்போதைய சமாதான முயற்சிகள் வெல்லாது என்கிறார் விக்கிரமபாகு

கொழும்பு, டிசம்பர் 31

**அரசாங்கம் நேர்மையுடன் செயற்பட்டிருந்தால், இனப் பிரச்சினைக்கு முன்னரே தீர்வு கண்டிருக்க முடியும்.**

**ஆனால் இப்போதைய சமாதான முயற்சிகள் வெற்றி அளிக்கும் என்று நான் நினைக்கவில்லை.**

**இப்போதைய தீர்வுத் திட்டத்தைக் காட்டி விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்த முடியாது. அதனால் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று நம்பமுடியவில்லை.**

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா.

நவசமசமாஜக் கட்சியின் 19 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நேற்றுக் கொழும்பு விஹாரமாதேவிப் பூங்காவில் நடைபெற்றன.

அந்த விழாவில் வைத்துப் பி. பி. ஸி. சிங்களச் சேவைச் செய்தியாளருக்கு கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின பேட்டி அளித்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களப் பௌத்தரின் உரிமைக்கு உறுதிமொழி

### பீடாதிபதிகள் கூடுகின்றனர்

கொழும்பு, டிச. 31

கண்டி தலதா மாளிகையின் மகா மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி சகல பௌத்த மத பீடங்களும் ஒன்று கூடவிருக்கின்றன.

''சிங்கள பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாப்போம்'' என்ற உறுதிமொழியை எடுப்பதற்காகவே இவர்கள் கூடவிருக்கின்றார்கள்.

மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் உட்பட ஏனைய பீடங்களைச் சேர்ந்த பீடாதிபதிகளும், பிக்குமார்களும் இதில் ஒன்று கூடி உறுதிமொழி எடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## ஒழுக்கம், கட்டுப்பாடுகளை ஆயுதப்படை பேணவேண்டும்

### இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு, டிச. 31

ஆயுதப் படையினர் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றைப் பேணவேண்டும்.

இப்படி இராணுவத் தளபதி றோகான் தளுவத்த தமது புத்தாண்டுச் செய்தியில் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒருசில ஆயுதப் படையினரின் அத்துமீறல் சம்பவங்கள் முழு நாட்டுக்குமே அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றன என்றும் அவர் சொன்னார்.

இவ்வருடம் படையினர் சில பின்னடைவுகளைச் சந்தித்தனர். மீண்டும் அவ்வாறு ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் — என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குண்டு வெடித்து 250 பேர் பலி!

இந்திய மாநிலமான அஸாமில் நேற்று இரவு பயணிகள் ரயில் ஒன்றில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததால் மூன்று பயணிகள் பெட்டிகள் முற்றாகச் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 250 க்கும் அதிகம் என்று முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## தாவடி கண்ணி வெடிச் சம்பவத்தில் 2பொதுமக்கள், 3ராணுவத்தினர்பலி

யாழ்ப்பாணம், டிச. 31

தாவடி, துரை வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் அகப்பட்டு குழந்தை உட்பட இரண்டு பொது மக்கள் மரணமானார்கள்.

இராணுவத் தரப்பிலும் மூவர் கொல்லப்பட்டதாகவும், நால்வர் காயமடைந்ததாகவும் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிறு மாலை 6.30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில், இணுவில் தெற்கைச் சேர்ந்தவரும், யாழ். மேல் நீதிமன்ற உத்தியோகத்தருமான கணபதிப்பிள்ளை திருவிளங்கம், அவரது மருமகளான கீர்த்தனா கமலநாதன் ஆகிய இருவருமே மரணமானவர்கள் ஆவர்.

கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து பொது மக்கள் காயம் அடைந்தனர்.

அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரி. தெய்வேந்திரம் (வயது 36 — சங்குவேலி தெற்கு, மானிப்பாய்), க. நாகராசா (வயது 42—உடுவில் கிழக்கு), ஏ. துரைராசா (வயது 23 — உடுவில்), ஏ. அருமைத்துரை (வயது 36 — உடுவில்), தெய்வேந்திரம் சூரியகாந்தி (வயது 35 — இணுவில்) ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**அறிக்கை**

இதே வேளை —

கண்ணி வெடித் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தியதாகக் குற்றஞ்சாட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப போர்க் கொடி தூக்கினம் எண்டு சொல்லுங்கோ!

### இன்று செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 31

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பொருள்களின் அளவு, நிறைகுறைவது தொடர்பாக வர்த்தக சங்கம் தெரிவித்துள்ள முறைப்பாடு தொடர்பாக இன்று காலை 10.00 மணிக்கு செயலகத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவிருக்கிறது.

வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், செயலக அதிகாரிகள் உட்படப் பலர் இதில் பங்கு பற்றவிருக்கின்றனர்.

(அ-3)

## யாழ். திரும்பக் கோரும் அறிவிப்பால் அரச ஊழியர் இக்கட்டான நிலை

### வவுனியா நிலைமை குறித்து பி. பி. ஸி. யில் பேட்டி

கொழும்பு, டிச. 31

யாழ்ப்பாணம் திரும்பி முன்னர் கடமையாற்றிய இடங்களில் வேலையைப் பாரமெடுக்குமாறு அரசாங்கம் விடுத்த சுற்றறிக்கையால் வவுனியாவில் தங்கி உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1,200 அரச ஊழியர்கள் பெரும் குழப்பம் அடைந்துள்ளனர் என்று பி. பி. சி சிங்களச் சேவைக்கு பத்திரிகையாளரான ஜினசேன ரத்துகமகே தெரிவித்துள்ளார்.

ஜினசேன ரத்துகமகே பி. பி. சி.க்கு தெரிவித்ததாவது;-

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1,200 அரசாங்க ஊழியர்கள் அகதிகளாகி வவுனியாவிலுள்ள அரச பணிமனைகளுக்கு வந்துள்ளனர்.

இவர்களில் ஆசிரியர்கள், வைத்தியர்கள் உட்பட பல தரங்களைச் சேர்ந்த அரச ஊழியர்கள் அடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மக்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அதிகார சபை, அண்மையில் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

வவுனியாவிலுள்ள யாழ். மாவட்ட அரச ஊழியர்கள் 1997 ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்தில் கடமைக்குச் செல்லவேண்டும். தவறின் அவர்களது சம்பளங்கள் நிறுத்தப்படும் என அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அகதிகள் தங்கியிருக்கும் பிரதேசங்களுக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்களைக் கூடிய விலையில் விற்கவா மகஜர்?

### வணிகர் மன்றத்துக்கு திட்டப்பணிப்பாளர் கடிதம்

யாழ்ப்பாணம், டிச. 31

பொருள்களைக் கூடிய விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்ற சில வர்த்தகர்களின் தூண்டுதலின் அடிப்படையில் மகஜரை [illegible] வதும், பொது மக்களுக்குப் பிழையான தகவல்களைப் பத்திரிகை மூலம் கொடுக்க முனைவதும்இக்கட்டான இச் சூழ்நிலையில் மிகவும் துரதிர்ஷ்ட வசமானதாகும்.

இவ்வாறு [illegible] திட்டப்பணிப்பாளர் யாழ்ப்பாணம் வணிகர் மன்றத்தினருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்ப

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

### கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரணபிரிவுப் பயிற்சிநெறி

### 1997 ஜனவரி

## விண்ணப்பம் கோரல்

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கல்லூரியினால் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:- 15 - 01 - 1997**

**அதிபர்.**

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3822)

## நினைவஞ்சலி



மலர்வு: 07 — 04 — 1969

உதிர்வு: 07 — 12 — 1996

### செல்வி ஆனந்தராஜா வத்சலா

(யாழ். விஞ்ஞான பீட 91/92 கல்வியாண்டு மாணவி)

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் ஸ்கந்தபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வத்சலா 07 – 12 – 1996 அன்று காலமாகி விட்டார் என்னும் செய்தி கேட்டு பேரதிர்ச்சி அடைந்தோம். இவரின் பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தினருக்கும் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**யாழ். விஞ்ஞானபீட 91/92 கல்வியாண்டு மாணவர்கள்.**

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(9137)

## மண்எண்ணெய்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிலையத்தில் மோட்டார் சைக்கிள்களுக்கு ஐந்து லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கப்பட்டது. (இ-117)

## மரக்கறி விலை உயர்வு

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை மிக உயர்ந்துள்ளது. (இ-30)

## ''இராஜதந்திர'' ஓவியங்கள்

யாழ்ப்பாணம், டிச. 31

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைவட்டத்தின் ஏற்பாட்டில் நாளை பிற்பகல் 2 மணிக்கு பொருளியல் மண்டபத்தில் ''இராஜதந்திர ஓவியங்கள்'' என்ற தலைப்பில் ஓவியர் கோ. கைலாசநாதன் கருத்துரை வழங்குவார். (இ-3)

## கால்நடைகள் சினைப்படுத்தல்

வலி தென் மேற்கு, டிச. 31

சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய நிலையத்தில் கால்நடைகளுக்கு சினைப்படுத்தும் நடவடிக்கை மீண்டும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

நாளை முதலாம் திகதி இது ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-115)


## பிறைற்வே இன்ஸ்ரிரியூட்

மூத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

**கலை, வர்த்தகம்**

**A/L 98, 99**

ஆரம்பம்: **01-01-97**
புதன் 2-00 மணி

**96 DAYCLASS**

ஆரம்பம்: **31-12-96**
செவ்வாய் 9-00 மணி

**அருள்நங்கை - நிர்வாகி**

(44416)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### கணபதிப்பிள்ளை திருவிளங்கம்

(மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்)

இணுவிலைச் சேர்ந்தவரும் எங்களுடன் பல்லாண்டு பணிபுரிந்தவருமான **க. திருவிளங்கம்** அவர்கள் 29-12-96 அன்று அகாலமரணமானார். அன்னாருக்கும் அவருடன் அகாலமரணமான மருமகள் **செல்வி கீர்த்தனாவுக்கும்** எமது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
யாழ். மேல் நீதிமன்ற
நலன்புரிக் கழகத்தினர்.

(44425)

## மரண அறிவித்தல்கள்

### சோ. க. வேலாயுதர்

[ஒய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்]

பண்ணாகத்தைச் சேர்ந்த சோமநாதர் கதிரவேலு வேலாயுதர் (ஒய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) 29-12-96 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான மலாயன் பென்சனர் கதிரவேலு—பொன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும், அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், குமரகுரு (போஸ்கோ, நல்லூர்), ஞானகுரு, ஜெயகுரு ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னலட்சுமி அப்பாத்துரை, மகாலட்சுமி. சீனிமுத்து, கனகலிங்கம் (சிங்கப்பூர்), ஜெயலட்சுமி கயிலாயபிள்ளை, பரமலட்சுமி மாணிக்கவாசகர், சுந்தரலிங்கம் (சங்கானை - ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் சகோதரரும், பவளகுமாரி (ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), இராசமலர் (ஆசிரியை, யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் மாமனாரும், மகோதரன், காங்கேயன், முரளிதரன், கோகிலன், யசோதரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (30-12-96) திங்கட்கிழமை பண்ணாகத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. குமரகுரு
(மகன்)

குமரன் அகம்,
பண்ணாகம், சுழிபுரம்.
(44402)

### கணபதிப்பிள்ளை திருவிளங்கம்

(இணுவில் — தெற்கு)

இணுவில் தெற்கைச் சேர்ந்த, யாழ். மேல் நீதிமன்ற அலுவலர் க. திருவிளங்கம் 29 - 12 - 96 ஞாயிறு அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை — வள்ளியம்மை தம்பதியினரின் அருமைப் புதல்வனும், துரைராசசிங்கம் — தங்கச்சியம்மாவின் (சீனியம்மா) அன்பு மருமகனும், நகுலாதேவியின் அன்பகலாத துணைவரும், துஷ்சாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி, 9 ஆம் ஆண்டு மாணவன்), குகசாந்தன் (இணுவில மத்திய கல்லூரி, 5 ஆம் ஆண்டு மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி ரட்ணபூபதி (ப. நோ. கூ. சங்கம், சுன்னாகம்), திருமதி திருஞானசோதி, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனபாலன் (கனடா), நடராசா (கனடா), பாலசேகரன் (கனடா), சந்திரசேகரன் (கனடா), குகரஞ்சினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (31 - 12 - 96) இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 3.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. சிவசோதி
(சகோதரர்)

''முருகானந்த வாசம்''
இணுவில் தெற்கு, இணுவில்.
(44426)

### செல்வி கீர்த்தனா கமலநாதன்

இணுவில் தெற்கைச் சேர்ந்தவரான கமலநாதன் கலைறஜி தம்பதியினரின் அன்புப் புதல்வி செல்வி கீர்த்தனா கமலநாதன் 29 - 12 - 96 இல் அகால மரணமானார்.

அன்னார் சுவர்ணாவின் அன்புச் சகோதரியும் (ஆண்டு - 2 இணுவில் மத்திய கல்லூரி), அருளம்பலம், இராசம்மா, அம்பலவாணர், திருப்புகழாம்பிகை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரவீந்திரன், குகானந்தன், தயானந்தன், தயாபரன், கிரிராஜினி (நால்வரும் கனடா), சுதாகரன் (வவுனியா) சாமகீதன் ஆகியோரின் மருமகளும், அனுஜா, றம்சா, திருமதி றஜினா ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ. கமலநாதன்
(தந்தை)

அருளானந்தவாசம்,
இணுவில் தெற்கு,
இணுவில்.
(44427)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

### 1997 ஆம் ஆண்டுக்கான

## மீள் கேள்வி அறிவித்தல்

21—11—96 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும் மேலதிகமாகக் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைய பின்வரும் இறைச்சிக்கடைகள், கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 01—02—1997 தொடக்கம் 31—12—1997 வரையுள்ள காலப்பகுதிக்கு மீளவும் கோரப்படுகின்றன.

| | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| **உடுவில் உப அலுவலகம்** | | | |
| 1. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 50/- | 500/- | 50,000/- |
| 2. உடுவில் ஆலடி மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 40,000/- |
| 3. இணுவில் சந்தை வெளிக் கடைகள் | | | |
| கடை இல. 1 & 2 | 25/- | 100/- | 900/- |
| கடை இல. 8 | 25/- | 100/- | 500/- |
| கடை இல. 9 | 25/- | 100/- | 500/- |
| கடை இல. 13 | 25/- | 100/- | 1,100/- |

1) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இறுதித் திகதி:- **16 - 01 - 97** ஆம் திகதி நண்பகல் **12.00** மணி வரை

2) கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி:- **17 - 01 - 97** ஆம் திகதி நண்பகல் **12 00** மணி வரை

3) கேள்விகள் திறக்கப்படும் திகதி :- **17 - 01 - 97** ஆம் திகதி பிற்பகல் **2.00** மணி

**ஆ. மகாலிங்கம்**
**விசேட ஆணையாளர்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
30—12—96
(சி/3823)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசையும் புலிகளையும் பேச்சுக்கு கூட்டிவருவது மட்டுமே எமது முயற்சி

## மத்தியஸ்தப் பணியல்ல என்கிறார் ரூபசிங்கா

தமது ''இன்ரர்நஷனல் அலேர்ட்'' அமைப்பு விடுதலைப் புலிகளுக்கும், அரசுத் தரப்புக்கும் இடையில் மத்தியஸ்தமுயற்சிகளைச் செய்யவில்லை; இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கூட்டி வருவதற்கான அடிப்படை உதவிகளையே வழங்குகின்றது என அந்த அமைப்பின் இணைப்பாளர் குமார் ரூபசிங்க கொழும்பில் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தார்.

தமது அமைப்பின் முயற்சி குறித்து அவர் கூறியதாவது:-

நாங்கள நிச்சயமாக மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடவில்லை. இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கூட்டி வருவதற்கான — தொடர்புபடுத்தும் — நிபுணர்களை எமது அமைப்புக் கொண்டுள்ளது.

இருதரப்புக்கும் இடையிலும் புரையோடிக் கிடக்கும் பரஸ்பர நம்பிக்கையின்மையே தீர்வு காண்பதில் முக்கிய சிக்கலாக உள்ளது. அதனை நீக்கி நம்பிக்கையை உருவாக்கி பேச்சுவார்த்தை மேசைக்கு இருதரப்பையும் கூட்டி வரவேண்டும்.

கேள்வி: நிலைமை சீரடைய அரசுத் தரப்பில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றீர்கள்?

பதில்: முதலில் வன்னிப் பகுதிக்குச் சர்வதேச பத்திரிகையாளர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் போய்வருவதற்கான வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக புலிகளின் தரப்பிலிருந்து வரக்கூடிய சமிக்ஞைகளை சர்வதேச தரப்பு பெறுவதற்கு வழியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்த முடியும்.

அடுத்து வன்னிப் பகுதிக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்ப வேண்டும்.

அத்தோடு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் மனப்பாங்கும், தாக்குதலை நிறுத்தும் எண்ணமும் அரசுத் தரப்பில் ஏற்பட வேண்டும்.

கேள்வி:- புலிகள் தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்?

பதில்:- அரசுக்கு மட்டுமல்லாமல் சிங்கள மக்களுக்கும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டியவர்களாக புலிகள் உள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களை முறியடித்து மீண்டும் போரை புலிகள் ஆரம்பித்தமை சிங்கள மக்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அதனை நீக்கவேண்டிய கடமை புலிகளுக்கு உள்ளது.

நத்தார் காலத்தை முன்னிட்டு சில மீனவர்களை விடுதலைப் புலிகள் விடுவித்தனர்.

அது போன்றவற்றுக்குப் பதில் சமிக்ஞைகள் அரசிடம் இருந்து வரும்போது தொடர்ந்து நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு நான் புலிகளை வற்புறுத்துவேன் —என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யுத்த நிறுத்தம் முதலில் ஏற்பட வேண்டும் என்பது அவசியமல்ல. தாக்குதல் நிறுத்தம் செய்து கொண்டு பேசலாம்.

என்றாலும் முதலில் இரு தரப்பிலும் நம்பிக்கை வளர வேண்டும்; பேச்சு நடத்தப்பட வேண்டிய விடயங்கள் எவை என்பது குறித்து முடிவு செய்வதற்காக முதலில் பேச வேண்டி (Talks For Talks) இருக்கும்.

தமது இலட்சியமாக தமிழீழத்தை புலிகள் அறிவித்துள்ளனர். அதற்குக் குறைவான யோசனை எதனையும் அரசு முன்வைத்தால் அதனைப் பரிசீலிக்கத் தயார் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

அரசு தற்போது முன்வைத்துள்ள தீர்வு யோசனைகளை புலிகள் பரிசீலிக்க வேண்டும். அதில் என்ன திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை அவர்கள் தெரிவிக்க வேண்டும். அப்படிக் கூற முடியாவிட்டால் தமிமீழத்துக்குக் குறைவாக தாங்கள் ஏற்கக் கூடிய குறைந்த பட்ச யோசனைகளையாவது அவர்கள் முன்வைக்க வேண்டும்.— என்றார். (உ-150)

## மோட்டார் சைக்கிள் வாங்க கடன்

அராலி, டிச. 31

கிராமசேவையாளர்கள் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய அவர்களுக்கு 45 ஆயிரம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது.

மோட்டார் சைக்கிள் கொள்வளவு பணத்தில் 75 சத வீதம் கடனாக வழங்கப்படும். மீதியை சம்பந்தப்பட்டவர் செலுத்த வேண்டும்.

பெறப்படும் கடன் 60மாத காலத் தவணைகளில் 16 சதவீத வட்டியுடன் மீள செலுத்தப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

# மனித உரிமைகள் உள்வாரிதிட்டம்: விண்ணப்பம் கோரப்படுகிறது

1997 இல் கொழும்பு பல்கலைக் கழகத்தில் மனிதஉரிமைகள் உள்வாரித் திட்டத்தில் பயில்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்கண்ட திட்டத்துக்காக மனித உரிமைகள் முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட பல்கலைக்கழக பட்டதாரிகளிடமிருந்து மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம் விண்ணப்பங்களை கோருகின்றது.

1996 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கும் தகுதியினைப் பெறுகின்றனர்.

ஆறு மாத காலத்தினை உள்ளடக்கிய உள்வாரித் திட்டம் 1997 இல் ஆரம்பமாகின்றது.

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட துறையில் — செயல் ரீதியிலான அனுபவத்தினை வழங்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மனித உரிமைகள் கற்கை நிலையத்திலும் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களிலும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி — பணிப்பாளர், (CSHR) மனித உரிமைகளுக்கான கல்வி நிலையம், கொழும்புப் பல்கலைக்கழகம் கொழும்பு.

இது சம்பந்தமான சுற்றறிக்கை யாழ். பல்கலைக்கழகத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு — யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர் ஆலோசகருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (இ-145)

# யாழ்ப்பாண விவசாயக் கல்லூரியில் மரக்கறி நாற்றுக்கள் விற்பனை

வலி. தென் மேற்கு, டிச. 31

மருதனார் மடத்தில் உள்ள யாழ்ப்பாண விவசாயக் கல்லூரியின் விவாசாய நிறுவனத்தில் மரக்கறி நாற்றுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

கத்தரி, மிளகாய், கோவா போன்ற நாற்றுக்களுடன் ஒட்டு மாங்கன்றுகளும் விநியோகிக்கப்படுகின்றன.

இளைஞர்களின் சுயதொழில் வாய்ப்புக்கான பயிற்சி நெறியும் புகட்டப்படுகின்றது.

தற்சமயம் - 4 மாத பயிற்சி நெறி நடைபெற்று வருகின்றது. ஜனவரியிலிருந்து ஒரு வருட பயிற்சி நெறி வகுப்புக்களை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தவிர - இந்த நிறுவனத்தில் விவசாயிகளுக்கான கருத்தரங்குகளும் - ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-145)

## சுவாமி விவேகானந்தரின் நூல்கள்

யாழ்ப்பாணம், டிச. 31

சுவாமி விவேகானந்தரது யாழ்ப்பாண வருகையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யாழ். மாநகர சபை சைவ வில்வ காரக்குழு யாழ். பொதுசன நூலகத்திற்கும், அதன் கிளை நூலகங்களுக்கும் உசாத்துணைப் பகுதிக்குமென சுவாமி விவேகானந்தரின் நூல்களை வழங்கியுள்ளது. (இ-3)

# 1996 - ஒரு பின்னோக்கிய பார்வை

''இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறுகள்'' என்ற வகையில் எம்மிடமிருந்து பிரிந்து செல்லும் இந்த ஆண்டில் எமது மண்ணிலும் உலகிலும் பல்வேறு மாற்றங்களும், அழிவுகளும், மாற்ற முடியாத வடுக்களும் ஏற்பட்டுள்ளன.

புதிய தொழில் நுட்பப் பயன்களும், சமாதான நிகழ்வுகளும், அரசியல் மாற்றங்களும் நல்ல எதிர் காலத்துக்கு வழி காட்டி நிற்கின்றன..

இலங்கையில் நீண்டகாலமாகப் பல பின்னடைவுகளைச் சந்தித்து வந்த தேசிய இனப்பிரச்சினை பல அரசியல் - இராணுவ உபாயங்களினூடாக நாடு முழுவதையும் சிதைத்து கொடிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

பெருமளவு மக்கள் அகதி வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்கள்.

மனித உரிமை மீறல்கள், பொருளாதார - பணச் சுற்றோட்ட வீழ்ச்சிகள், இராணுவச் செலவுகள் அதிகரிப்பு, தொற்றுநோய்கள், வறுமை, உயிர் இழப்புக்கள், மின்சாரப் பற்றாக்குறை போன்றவற்றினால் அனைத்து மக்களும் மன உளச்சல்களுக்கும் உடல் - உளத் தாக்கங்களுக்கும் ஆளாகி வேதனை அடைந்த ஆண்டாகவே இது உள்ளது. ஜனவரி 31 ஆம் திகதி மத்திய வங்கிக் கட்டடம் குண்டினால் தகர்க்கப்பட்டமை, ஏப்ரல் 19 இல் சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கை-2 ஜூலை 21 இல் முல்லைத் தீவுத் தளம் தகர்க்கப்பட்டமை, ஜூலை 24 இல் கொழும்பில் ஓடும் ரயிலில் குண்டு வெடித்து எழுபது பேர் இறந்தமை, இந்த ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களில் சில ஆகும்.

நவம்பர் 29 இல் அனுராபண்டார நாயக்க மயிரிழையில் உயிர் தப்பியமை, இலங்கையின் அரசியல் வரலாற்றில் பல தாக்கங்களை ஏற்படுத்திய ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலமானது மற்றும் சில சம்பவங்கள் ஆகும்.

### இந்திய உப கண்டத்தில்

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் 11 ஆவது பொதுத் தேர்தல் மே, ஜூன் மாதத்தில் நடைபெற்றது. 543 தொகுதிகளில் 59 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

தேர்தலில் 14,274 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. முதலில் பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி அமைத்தபோதிலும் பெரும்பான்மை இல்லாததால் அந்த அரசு பதவி இழந்தது.

பின்னர் 9 கட்சிகளின் கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டு பிரதமராக கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தேவ கௌடா தெரிவானார்.

தமிழகத்தில் தி. மு. க. சட்டசபையைக் கைப்பற்றியது. கருணாநிதி முதலமைச்சர் ஆனார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மிக மோசமான பல ஊழல் குற்றச் சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டார்.

முன்னைய பிரதமர் நரசிம்மராவும் பல ஊழல் குற்றங்களைப் புரிந்தமை புலனாய்வுத் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் தலைமைப் பதவியை அவர் இராஜினாமாச் செய்துள்ளார்.

### உலக நாடுகளில்

பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோ நவம்பர் 5 இல் ஜனாதிபதியால் பதவி நீக்கப்பட்டார். ஜூன் 24 இல் பங்களாதேஷில் புதிய பிரதமராக ஷேய்க் ஹசீனா பதவி ஏற்

## த. கர்ணி

றார். ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுப் போர் தீவிரம் அடைந்தது. காபூலைத் தலீபான் படைகள் கைப்பற்றின.

தென் பிலிப்பீன்ஸில் ''மோறோ'' போராளிக் குழு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டது. 24 வருடப் போர் ஓய்வுக்கு வந்தது. பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸுக்கும், ''மோறோ'' குழுத் தலைவர் பேராசிரியர் நூர் மிசெரிக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. செச்சினியாவில் போரைத் தொடர்ந்து சமாதானாச் சமிக்ஞைகள் தெரிய ஆரம்பித்துள்ளன. இஸ்ரேலிய புதிய பிரதமர் நெத்தனியாகு, பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஆகியோரும் தொடர்ந்து சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

போரினால் எதையும் சாதிக்க முடியாது என்பது நீண்டகாலம் போராடியவர்களின் முடிவுகளாகின.

சமாதானம் - பேச்சுவார்த்தையே பலன் தரும் என்ற உணர்வு உலகளாவிய ரீதியில் இந்த ஆண்டு பெருமளவு அரசியல்வாதிகளினால் பேசப்பட்டது.

ஐ.நா சபைச் செயலாளர் நாயகமாக கானா நாட்டின் கொபி அனன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவ் வருடம் அமெரிக்க விண்வெளி வீராங்கனை சானன் லூசிட் விண்வெளியில் 169 நாள்கள் சுற்றி வந்து அதிக நாள்கள் விண்வெளியில் பறந்த முதல் பெண் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

மார்ச் மாதத்தில் ''கியாகுடாவே'' என்ற வால் நட்சத்திரத்தை சாதாரண கண்களால் எமது மக்களும் பார்த்தனர். நவம்பர் மாதமும் ஹேல் - பொப் என்ற வால் நச்சத்திரம் பச்சை, நீல நிறங்களை வெளியிட்டவாறு பூமியை வலம் வந்தது.

செவ்வாய்க் கிரகத்தில் உயிர் ஜீவ அணுக்கள் உள்ளதை அமெரிக்க நாஸா விஞ்ஞானிகள் கண்டுபிடித்த நிலையில், அமெரிக்க கலிலியோ விண்கலம் வியாழன் கோளிலுள்ள ஒரு சந்திரனில் தண்ணீர் இருப்பதையும் கண்டுபிடித்துள்ளது.

சந்திரனிலும் பனிக்கட்டிகள் இருக்கின்றன என்ற செய்தியும் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 17 ஆம் திகதி சர்வதேச சூரியசக்தி மாநாடு சிம்பாப்பேயில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் எல்லா சக்தித் தேவைகளுக்கும் சூரியனையே பயன்படுத்தும் நுட்ப முறைகள் பற்றி ஆராயப்பட்டது.

சர்வதேச உணவு மாநாடு ரோமில் நடைபெற்றது. பட்டினியால் வாடும் மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பது பற்றிக் கவலை தெரிவிக்கப்பட்டது.

ஆசியாவில் பஞ்சத்தைப் போக்க மிக அதிக விளைச்சலைத் தரும் புதிய வகை நெல்லினத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இவர்களுக்கு ''உலக உணவு'' விருது வழங்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பில்கிளின்ரன் தெரிவானார். அமெரிக்காவில் அட்லாண்டாவில் ஒலிம்பிக் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.

2000 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகள் ஆஸ்திரேலிய சிட்னி நகரில் நடைபெறவுள்ளன.

வில்ஸ் உலகக்கிண்ணத்தையும், சிங்கர் கோப்பையையும் வென்று உலகப்புகழ் பெற்றது இலங்கைக் கிரிக்கெட் அணி.

1996 ஆம் ஆண்டு சிறந்த சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டக்காரருக்கான விருது மேற்கிந்திய அணியின் பிரேலாறாவுக்கு வழங்கப்பட்டது.

ஸ்ரீலங்கா ''அசோசியேட்டியட்கம்பனி'' இலங்கையில் 1995-96- இல் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதைச் சனத் ஜெயசூரியாவுக்குக் கொடுத்தது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 கிராம சேவையாளர் பிரிவுகள் இணைந்து இளைஞர் கழகம்

## சுயதொழில் வாய்ப்புக்கும் பயிற்சி

சாவகச்சேரி, டிச. 31

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மீசாலை வடக்கு, மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு மற்றும் கிராமாவில் ஆகிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி இளைஞர் கழகம்ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வு மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் இளைஞர் சேவை அதிகாரி செ. நாகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கிராம சேவை உத்தியோகத்தர்கள் இளைஞர்கள், யுவதிகள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்,

இக் கழகத்தின் மூலம் இளைஞர்களுக்கான விளையாட்டுத் துறைப் பயிற்சிகள், பாடசாலை கல்வியை முடித்வதர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்கள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளன.

பயிற்சியின் பின்னர் தொழிலை மேற்கொள்ள வங்கிக் கடன் திட்டங்களையும் இளைஞர்களுக்கு வழங்க மன்றம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. (இ-31)

# கிழக்கில் படையினர் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, டிச. 31

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதலைப் தீவிரப் படுத்தியுள்ளதையடுத்து படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் கடுமையாக்கி உள்ளனர்.

புளுக்குனாவ, கொம்மாந்துறை அதிரடிப்படை முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மேலும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

பொலீஸ் நிலைகள், படை முகாம்கள் மற்றும் விமான நிலையம், துறைமுகம் ஆகியவற்றுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது என்று கொழும்புப் பத்திரிகை செய்தி கூறுகிறது.

(இ-3-150)

# போதைப் பொருள் வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக இலங்கை

கொழும்பு, டிச. 31

சிலாபம் மாதம்பைப் பகுதியில் 100 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் புதிய தகவல்கள் பல வெளியாகி உள்ளன.

போதைப் பொருள் விற்பனையின் சர்வதேச சந்தையின் மத்திய நிலையமாக இலங்கை இயங்கி வந்துள்ளதாகவும்—

இலங்கை, பாகிஸ்தான், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் குழுக்கள் ஒன்றாக செயற்பட்டு இந்த வியாபாரத்தை நடத்திவந்துள்ளதாகவும்— விசாரணைகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பிரெஞ்சு பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2 பாகிஸ்தானியரையும், இலங்கையர் ஒருவரையும் பொலீஸார் தேடிவருகின்றனர்.

(இ-3-150)

# நீர்கொழும்பில் மூவர் கைது!

கொழும்பு, டிச. 31

நீர் கொழும்புப் பகுதியில் இருந்து படகு மூலம் மன்னாருக்கு பொருள்கள் கடத்துபவர்கள் என்ற சந்தேகத்தில் மூவரை நீர் கொழும்புப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

முருங்கனைச் சேர்ந்த இவர்கள் எரிபொருள்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை கடத்தும் பணியில் ஈடுபட்டுவந்தார்கள் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

நீர்கொழும்பில் உள்ள கடலேரிக்கு அருகில் தள்ளாடுவ என்னும் காட்டுப் பகுதியில் பதுங்கியிருந்த பொலீஸாரே அவர்களைக் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-150-3)


புதிய ஆண்டில் மாணவர்களின் நலன்கருதி மற்றுமோர் சேவை

ESTD:- 1973 REGD:- № J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY.

SPOKEN ENGLISH With GRAMMAR

By: பிரபல ஆசிரியர்

"பேச்சுச் சிங்களம்"

யாழ். முன்னணி ஆசிரியர்

T. சகாதேவன்

ஆரம்பம்: 05 - 01 - 1997

மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

(44409) - அதிபர்



A/L 99

கலை வர்த்தகம்

ஆரம்பம்: 04 - 01 - 97

8 மணி

வழமையான ஆசிரியர்குழு

கலை வர்த்தகக் கல்லூரி

(C. C. A)

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(44417)



யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

The Jaffna Education Centre

( சாந்தி சினிமா முன்பாக )

வருடம் 4 - 10, O/L, A/L

SPOKEN ENGLISH WITH GRAMMAR, சிங்களம், SHORTHAND TYPING

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 05 - 01 - 97

— நிர்வாகி

( 44414 )


# நினைவலைகள்

மூன்றாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு



வித்துவான் கந்தசாமி காமாட்சிசுந்தரம் (நயினாதீவு)



திருமதி கனகம்மா காமாட்சிசுந்தரம் (நயினாதீவு)

எழுவானின் ஒளி மூலங்களே, நடுவானில் கரைந்ததென்னே. அழுவானேன் என்று ஆறோம், வருநாளில் அடிவானில் பார்த்திருப்போம் விழித்து.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூசணி அம்பாளை பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள், உறவினர்கள்.

கச்சேரி- கிழக்கு ஒழுங்கை, கச்சேரி.

(44111)

உ

புலோலி தெற்கு

## ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய தரும பரிபாலன சபை

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதுவருட நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 05-01-1997 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதனால் அம்பிகை அடியார்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
இ. கிருபாகரசூரியன்
செயலாளர்.
ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய தரும பரிபாலன சபை.

31-12-1996

(44413)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## திருமதி ஜெயந்தி சாந்திகுமார்

(விவசாயப் போதனாசிரியர்)

01 - 12 - 1996 திருகோணமலையில் காலமாகிய செய்தி அறிந்து நாம் மனம் கலங்கினோம். அவர் எமது நல்லூர் கமநல சேவை நிலையத்தில் பல வருடங்களாகச் சேவை புரிந்த காலத்தில் ஆற்றிய சேவைகள் மறக்க முடியாதன; வாய்விட்டுச் சொல்லவும் இயலாதன.

இன்று தனது மனைவியை இழந்து துன்புறும் திரு. சாந்திகுமார் மனச்சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம் கமநல சேவைத் திணைக்களம்,
நல்லூர் கமநல சேவை நிலையம்.

(44412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹெப்ரோன்' ஒப்பந்தம் இன்று கைச்சாத்தாகும்!

## இஸ்ரேல் - பலஸ்தீன தலைவர்கள் இணக்கம்

ஜெருசலேம், டிச. 31

1967 இல் நடைபெற்ற ஆறு நாள் யுத்தத்தின் போது இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் வந்த ''ஹெப்ரோன்'' பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறுவது தொடர்பான ஒப்பந்தம் இன்று இஸ்ரேல் பிரதமர் நத்தனியாகோவுக்கும் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்துக்கும் இடையே கைச்சாத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யிட்சாத் மொதார்சய் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தைச் சந்தித்து ஒன்றரை மணி நேரம் பேச்சு நடத்தினார்.

எஞ்சிய பிரச்சினைகள் யாவும் பேசித் தீர்க்கப்பட்டு விடும் என அரபாத் நம்பிக்கை தெரிவித்தார்,

இந்த ஒப்பந்தம் ஹெப்ரோனின் 80 சத வீதப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டை பலஸ்தீன தன்னாட்சி அமைப்பிடம் கையளிக்க வகைசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-10)

## ஆப்கானிஸ்தானில் சண்டை தீவிரம்

காபூல், டிச. 31

ஆப்கானிஸ்தானில் யுத்த நிலைமை மேலும் தீவிரமடைந்துள்ளது.

தலிபானுக்கு எதிரான கூட்டணிப்படைகளின் போர் விமானங்கள் காபூல் விமான நிலையம் மீது பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளன.

500 கிலோ குண்டு ஒன்றை காபூல் விமான நிலையத்தின் மீது இந்த போர் விமானங்கள் வீசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலிபான் குழுவின் முக்கிய தலைவர்கள் இருந்து செயல்படும் காபூல் அதிபர் மாளிகையும் குண்டு வீச்சுக்கு இலக்கானதாகத் தெரியவருகிறது.

ஆனால் தரை நகர்வுகளில் தலிபான் படைகள் அனுகூலங்களைப் பெற்றுள்ளன எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-10)

## பணயக் கைதிகள் விவகாரம் சுமுகமாக முடியும் அறிகுறி

பதின்னான்காம் நாளாகத் தொடரும் பெரு நாட்டு பணயக் கைதிகள் விவகாரத்துக்கு சுமுகமான தீர்வு காணும் அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துள்ளன.

போராளிகளுடன் உயர் மட்ட அளவில் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள பெரு நாட்டு அரசு தற்போது முன்வந்துள்ளது.

தனது கல்வி அமைச்சர் தொமின்தோ பலர்நோவை பேச்சுவார்த்தை நடத்த அது அனுப்பியுள்ளது.

போராளிகளுடன் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறிவந்த பெருநாட்டு அரசு கீழிறங்கி வருவதை அடுத்து சிறையில் வாடும் தமது அனைத்துச் சகாக்களையும் விடுவிக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து போராளிகளும் இறங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-10]

## உலக அரங்கில்

### மக்காவுக்கு அடுத்ததாக தோங்கி

டாக்கா, டிச. 31

''மக்கா'' மாநகருக்கு அடுத்த படியாக உலக இஸ்லாமிய சமுதாயம் புனித தலமாகக் கருதுவது பங்களாதேஷ் நாட்டிலுள்ள ''தோங்கி'' என்னும் சிறு நகரையே ஆகும்.

ஆண்டு தோறும் ''பிஸ்வா இஸ்தேமா'' எனப்படும் உலக இஸ்லாமிய சம்மேளனம் இங்கு கூடுகிறது.

இஸ்லாமிய சமுதாயம், சகோதரத்துவம், ஒற்றுமை ஆகியனவற்றை உறுதிப்படுத்தும் நோக்குடன் நடத்தப்படும் இந்தச் சம்மேளன மாநாடு கடந்த இரு தினங்களாக நடைபெற்றது.

(இ-10)

## கொரியாவில் சுமுக நிலை: கிளின்ரன் மகிழ்ச்சி தெரிவிப்பு

தென் கொரியா எல்லைக்குள் வடகொரியா நீர் மூழ்கிக் கப்பல் ஊடுருவியது குறித்து வடகொரியா மன்னிப்புக் கோரியது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என அமெரிக்க அதிபர் கிளின்ரன் தெரிவித்தார்.

இதன் மூலம் கொரிய தீபகற்பத்தில் பதற்ற நிலை குறையும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இத்தகைய ஊடுருவல் சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கவும்—

கொரியத் தீபகற்பத்தில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் நிலைநாட்டவும் — மற்றைய நாடுகளுடன் இணைந்து செயற்படப்போவதாக வடகொரியா தெரிவித்திருப்பது குறித்து கிளின்ரன் மகிழ்ச்சி வெளியிட்டார்.

(இ-10)

## கௌதமாலாவில் அமைதி ஒப்பந்தம்

கௌதமாலா, டிச. 31

கௌதமாலா நாட்டின் இடதுசாரிப் போராளி அமைப்பான கௌதமாலா தேசியப் புரட்சி அமைப்புக்கும் அரசுக்கும் இடையே கடந்த ஞாயிறன்று சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதன் மூலம் 36 ஆண்டுகால கௌதமாலா நாட்டின் இரத்தம் தோய்ந்த அரசியல் வரலாறு முடிவுக்கு வந்துள்ளது.

1980 களில் கௌதமாலா நாட்டின் இடது சாரிகளை ஒழிக்கும் முயற்சியில் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் கொல்லப்பட்டார்கள். 50 ஆயிரம் பேர் காணாமற் போனார்கள்.

இடதுசாரிகளின் ஆதரவாளர்கள் எனக்கருதப்பட்டவர்கள் இரவு வேளைகளில் வீடுகளில் இருந்து வெளியே இழுக்கப்பட்டு இராணுவத்தால் மிருகத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இடதுசாரிப் போராளிகள் ஞாயிறன்று தமது மறைவிடத் தளங்களில் இருந்து ஒப்பந்தத்துக்காக கௌதமாலா நகருக்கு அணிவகுத்து வந்தபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று அவர்களுக்கு உற்சாக வரவேற்பளித்தார்கள்.

1960ஆம் ஆண்டு தலைமறைவான இடதுசாரித் தலைவர் பாபிலோ மென்சாத்தோ ஞாயிறன்று மக்களுக்குத் தோன்றி உரையாற்றினார்.

''ஆயிரக்கணக்கான எமது வீரர்கள் எந்த இலட்சியத்துக்காக உயிர் கொடுத்தார்களோ அதே இலட்சியத்துக்காக இனியும் எமது பயணம் தொடரும். சமாதான நாள்களை இனி எதிர்நோக்குகிறோம்'' எனத் தெரிவித்தார்.

கௌதமாலா நாட்டு அதிபர் அல்வானோ அர்ஷே இந்த ஆண்டு ஜனவரியில் தேர்தலில் வென்று ஆட்சியேறினார்.

அவர் பதவி ஏற்றபின், மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளால் பதவி நீக்கம் செய்தார். இதுவே அமைதிக்கான முதல் படியாக அமைந்தது.

(இ-10)

## வெள்ளப் பாதிப்பு விவரம் சேகரிப்பு

பளைப்பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழைகாரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் விவரங்கள் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றன.

தம்பகாமம், கச்சாய் வெளி கிராம அலுவலர் பிரிவுகளே வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளென இனங் காணப்பட்டுள்ளன.

இப் பிரிவுகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் அந்தந்த கிராம அலுவலர்களால் சேகரிக்கப்படுகின்றன.

## பளை பிரதேச செயலகத்தினால் கிளிநொச்சிப் பிரிவு ஓய்வூதியம்

தென்மராட்சி, டிச. 31

கிளிநொச்சி மாவட்ட செயலக ஓய்வூதியப் பிரிவில் ஓய்வூதியம் பெறும் பளைப் பகுதி ஓய்வூதியர்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் பளைப் பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இப் பகுதியில் ஓய்வூதியம் பெறுபவர்களின் விவரங்கள் பளைப் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பளைப் பிரதேச செயலகம் தற்காலிகமாக யாழ். மாவட்ட செயலகத்துடன் இணைக்கப்பட்டதையடுத்தே இப்பகுதி ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாழ். அரச அதிபரினால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## விதை உருளைக்கிழங்கு விற்பனை தடுக்க செயலகம் நடவடிக்கை

வலி. தென்மேற்கு டிச. 31

விதை உருளைக்கிழங்கைப் பெற்றவர்கள் அதனை உணவுத் தேவைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க சங்கானை — சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஒருவர் மட்டுமே விதை உருளைக்கிழங்கை விற்பனை செய்துள்ளார் என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார். பிரதேச செயலகத்துக்கு 5 ஆயிரம் ரூபா செலுத்துமாறு இவருக்கு உத்தரவிடப்பட்டது.

ஏனையவர்களும் விற்பனை செய்கின்றார்களா? என்பதை அவதானிப்பதற்கு பிரதேச செயலகத்தால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அது செயல்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-144)

## ஒன்றுக்கொன்று முரண்பாடான உரைகளை நிகழ்த்த வேண்டாம்

### கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

கொழும்பு, டிச. 31

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் பிரசாரங்களின் போது அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள்யாவும் ஒரே விதமான கொள்கையுடன் உரைகளை ஆற்ற வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சகல கட்சிகளையும் கேட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரங்களின் போது முரண்பாடுகள் நிலவினால், அரசின் நலனைப் பாதிக்கும் செயலாக அது அமைந்துவிடும் என்பதால், சகலரும் ஒரே கொள்கையுடன் உரையாற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

(இ-3-150)

## உள்ளூராட்சி பட்டதாரிகள் நிரந்தர நியமனம்

கொழும்பு, டிச. 31

உள்ளூராட்சி நிறுவனங்களில் சுற்றாடல் பிரிவுகளில் கடமையாற்றும் பட்டதாரிகள் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நிரந்தர நியமனத்தைப் பெறவுள்ளனர்.

போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமனி அத்துலத்முதலி இது தொடர்பாக பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய 294 பட்டதாரிகள் நிரந்தர நியமனத்தைப் பெற இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## மட்டக்களப்பு எல்லைப்புற முகாம்கள் மூடப்படுகின்றன

மட்டக்களப்பு, டிச.31

புளுக்குனாவ முகாம் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்துமட்டக்களப்புமாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் அமைந்திருந்த பல முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன,

கடந்த வாரம் பாலையடிவட்டை, 13 ஆம் கொலனி விசேட அதிரடிப் படை முகாம் மூடப்பட்டது. கடந்த சனிக்கிழமை வெல்லாவெளி அதிரடிப்படை முகாமும், பொலீஸ் நிலையமும் மூடப்பட்டன.

வெல்லா வெளிப் பொலீஸார் மண்டூர் பிரதேச சபைக் கட்டடத்தில் முகாமிட்டுள்ளனர்.

அதிரடிப் படையினர் மண்டூர் பாலமுனை முகாமிலும் 36 ஆம் கொலனி முகாமிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸ் மா அதிபரின் விசேடஉத்தரவின்பேரிலேயே முகாம்கள் மூடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கொம்மாந்துறை, சித்தாண்டி, செங்கலடி முகாம்களில் மேலும் படைகள் குவிக்கப்பட்டு அம் முகாம்கள் பலப்படுத்தப் பட்டுவருகின்றன.

(இ-3)

## பகிரங்க இடத்தில் தீக்குளிக்க முயற்சி

கொழும்பு, டிச. 31

வவுனியா மணிக்கூட்டுச் சந்தியில் கடந்தசனிக்கிழமை பிற்பகல் ஒருவர் தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குளிக்க முயன்றார். மக்களால் அவர் காப்பாற்றப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 48 வயதான கே. சுந்தரமூர்த்தி என்பவரே தற்கொலை செய்ய முயன்றவராவார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புது இஞ்சின் குவாட்டா மொடல் நம்பர் 1200(1.2kw வாட்ஸ்) தனிப் பாவனையில் உள்ள சிறிராம் ஜெனரேற்றர் மொடல் நம்பர் 650 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. ஜெயநந்தன் (நந்தன்), திக்கம் சந்தை அருகில். (அல்வாய் மேற்கு, அல்வாய்).

(44393)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் எழுத வாசிக்க கதைக்கப் பயில. வகுப்பு 5 p.m. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, தொடர்பு: ஜெயந்தி ஸ்ரோர்ஸ், இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் சந்தி).

(44398)

### கடை வாடகைக்கு

யாழ். காங்கேசன்துறை வீதியில் கடை வாடகைக்கு உண்டு. முற்பணம் 10000/-, வாடகை 300/-. ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, இல. 426, ஜெயந்தி ஸ்ரோர்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(44399)

### வாடகைக்கு தேவை

யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் ஒருவரின் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய குடும்பத்திற்கு திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர் பகுதிகளில், வீடு வாடகைக்கு உடன் தேவை. தொடர்பு கொள்க. அ. குக்தாஸ், இல. 225, கோயில் வீதி, நல்லூர். (UNHCR அருகாமையில்) (44381)

## வைத்திய சேவை இடமாற்றம்

பளை வண்ணான்கேணியில் இயங்கிய

**சக்தி ஆங்கில வைத்தியசாலை**

தற்போது மிருசுவிலில் உள்ள

**பூமகள் வைத்தியசாலைக்கு**

இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் வி. ஆறுமுகம்
(R. M. P)

(சி-3818)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 11 — 1954



மறைவு: 01 — 12 — 1996

## திருமதி ஜெயந்தி சாந்திகுமார்

(முன்னாள் நல்லூர் விவசாயப் போதனாசிரியை)

31 - 01 - 96 வரை யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி இடமாற்றத்தில் திருகோணமலை மாவட்டத்திற்குச் சென்று கடமையாற்றி 01 - 12 - 96 இல் திருகோணமலையில் காலமான திருமதி ஜெயந்தி சாந்திகுமார் அவர்களுக்கு, எமது 31 ஆம் நாள் நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பிரிவால் துயருறும் அவரது கணவன், தந்தை, மாமன், மாமி, சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள்.**

(44407)

## 3 ஆம் ஆண்டில் நீங்கா நினைவலைகள்

மலர்வு: 1968 — 08 — 26



உதிர்வு: 1994 — 01 — 03

செல்வன்

## இராசதுரை இராசேஸ்வரன்

(உயர்தர வகுப்பு மாணவன்)

**திதி: 31 - 12 - 1996**

ஒரு கூட்டுக் குருவி ஐந்தில் ஒன்றாய் நீயிருந்தாய்
ஒரு குருவி நீ பறந்து எமை துயரத்திலாத்தி விட்டாய்!

மறுபிறவி நீ பிறந்து நம் கூட்டில் சேர்வதற்கு
மனமுருகி வேண்டுகின்றோம் இதயா நீ கேளாயோ?
இதயத்தில் என்றுமே உன் நினைவு எழுந்து நிற்க
என்றுமே வணங்குகின்றோம் எம்மிடம் நீ வருவற்கு.

உன் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

நாவற்காடு,
அச்சுவேலி.

(9136)

## கல்வாரி பூரண சுவிஷேச ஊழியங்கள்

# விழிப்பிரவு ஆராதனை

''கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அதின் அவாந்தர வெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்'' ஏசாயா 51:3

**இடம்:** கல்வாரி பூரண சுவிஷேச ஊழியங்கள்
89, பிறவுண்வீதி, கொக்குவில்.

**காலம்:** 31 - 12 - 1996

**நேரம்:** மாலை 5.30 மணி முதல் அதிகாலை 5.30 மணி வரை

## புதுவருட ஆராதனை

கிளை சபைகள்

**மானிப்பாய்:** காலை 9.00 மணி - நண்பகல் 11.00 மணி வரை

**திருநெல்வேலி ஆடியபாதம் வீதி:** பி. ப. 3.00 மணி-4.30 மணி வரை

**வாருங்கள்! ஆராதியுங்கள்!**
**தேவாசீர்வாதம் பெறுங்கள்!**

**போதகர், ஊழியர்கள், விசுவாசிகள்.**

(44394)

கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு:

# பரீட்சைக்கு தோற்ற முடியாது பளை இளைஞர்கள் பாதிப்பு!

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கிராம அலுவலர் ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு, பளைப் பிரதேசத்தில் இருந்து விண்ணப்பித்த இளைஞர், யுவதிகள் அதற்குத் தோற்ற முடியாத துரதிர்ஷ்டசாலிகள் ஆயினர்.

அவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்காததால் பளைப் பகுதி விண்ணப்பதாரர் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் தமக்குரிய அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை என்பதனைத் தெரிவித்து, மாற்று ஏற்பாடு ஏதாவது செய்யுமாறு பரீட்சைத் திகதிக்கு முன்னர் யாழ். கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் கேட்டிருந்தனர்

ஆனால் இது விடயத்தில் தங்களால் எதுவும் செய்ய முடியாது என்று அவர்கள் கை விரித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்துக்கு உட்பட்டதாகையால், அப்பகுதி விண்ணப்பதாரரின் அனுமதி அட்டைகள் கிளிநொச்சிக் கல்விப் பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (அ-117)

## பளை ஆசிரியர் சம்பளம்

பளை கல்விக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களின் டிசம்பர் மாதச் சம்பளம் கடந்த வெள்ளிக்கிழமை கல்விக் கோட்ட அலுவலகத்தினால் அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்பட்டது. (இ-117)

## முதலாண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லையா காசிப்பிள்ளை

தோற்றம்: 09 - 01 - 1919

மறைவு: 26 - 12 - 1995

கொக்குவிலைச் சேர்ந்த முன்னாள் காசிப்பிள்ளை அன்கோ உரிமையாளர் செ. காசிப்பிள்ளை அமரத்துவநாள் இன்று (31 - 12 - 96) நினைவு கூரப்படுகிறது. இவர் அமரர் சரஸ்வதியின் கணவரும், அமரர் பொன்னுத்துரை, திருமதி. மங்கையர்க்கரசி செல்லத்துரையின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

''இராம கிருஷ்ணபவனம்''
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(44395)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் ஆறுமுகம் தர்மராசா

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**தோற்றம்: 15-06-1970**

**மறைவு: 01-12-1996**

01 - 12 - 1996 அன்று சிவபதமடைந்த எமது கனிஷ்ட புத்திரன் அமரர் ஆ. தர்மராசா அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (31-12-1996) செவ்வாய்க்கிழமை எமது வீட்டில் நடைபெற உள்ளது. கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும், தொடர்ந்து மதியபோசனத்தில் பங்குபற்றுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்டபர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கா. ஆறுமுகம் குடும்பத்தினர்**

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(44367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ‘பேர்க்’கும் போக்கும்

ஜனாதிபதி சந்திரிகாவின் மிக நெருங்கிய தொழில்சார் நண்பரான ராஜன் ஆசீர்வாதம் “பேர்க்” (PERC) எனப்படும் பொதுத்துறைகள் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து இன்றோடு விலகிக் கொள்கிறார்.

அதற்கான காரணங்களை ராஜன் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. எனினும் தமிழர் விவகாரத்தில் அரசாங்கத்தின் போக்குக் குறித்துக் கவலை கொண்டே, அதிருப்தி அடைந்தே மிக முக்கியமான ஒரு பதவியிலிருந்து அவர் விலகுவதாகக் கொழும்பில் பேச்சடிபடுகின்றது.

ஸ்ரீலங்கா அரசுகள் இனப்போரை நடத்துவதிலேயே கடந்த பல வருடங்களாக அதிக அக்கறைகாட்டி வருகின்றன. அதனால் வெளிநாட்டுக் கடனும், நிதி உதவியுமே நாட்டின் பொருளாதாரத்தை முழுக்க முழுக்கத் தாங்கிக் கொண்டு நிற்கின்றன.

இவை இரண்டையும் தடங்கல், முடங்கல் இன்றிப் பெறுவதற்கு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றை அரவணைப்பது மட்டுமன்றி, அவை போடும் தாளத்துக்கு ஏற்றாற் போல அரசு ஆடவும் வேண்டும்,

அரசாங்கத் துறைகளை தனியார் மயப்படுத்துதல், பொது நிறுவனங்களில் ஆட்குறைப்புச் செய்தல் ஆகியன உலக வங்கியின் பற்றுறுதி மிக்க கொள்கையும் சித்தாந்தமும் ஆகும்.

உலக வங்கியை அதிவிசேடமாகத் திருப்தி செய்வதற்காகத் தான் “பேர்க்” நிறுவப்பட்டது. நாட்டின் பொருளியல் ‘‘முன்னேற்றத்தை’’ நிர்ணயிக்கும் முதன்மை நிறுவனமாக விளங்கும் ‘‘பேர்க்’’கின் தலைமைப் பதவி ராஜனுக்கு வழங்கப்பட்டது என்றால், அவர் ஜனாதிபதிக்கு எவ்வளவு நெருக்கமானவர், நம்பிக்கைக்குரியவர் என்பதை இலகுவில் மதிப்பிடலாம்.

1995 ஆம் ஆண்டு முற்பகுதியில் அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சின் போது ராஜன் ஆசீர்வாதம் அரச தரப்புப் பிரதிநிதிகள் நால்வரில் ஒருவராக யாழ்ப்பாணம் வந்தார்.

அவர் ஓர் அரசியல்வாதியாக அன்றி தொழில்சார் நிபுணராக இருந்த போதிலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழர் விவகாரத்தில் நியாயமாக நடந்து கொள்வார் என்று பெரு நம்பிக்கை வைத்திருந்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மாணிக்கராஜா வசந்தராஜா போலவே, ராஜன் ஆசீர்வாதமும் ஜனாதிபதியின் கொள்கை, செயற்பாடுகளை உள்ளும் புறமும் அறிந்தவர். சந்திரிகா புதிய சிந்தனைப் போக்காளர் என்பதால் தமிழர் விடயத்தில் நீதியாகவும், தற்துணிவுடனும் செயற்படக் கூடியவர் என்று வசந்தராஜா நம்பியது போலவே ராஜனும் விசுவாசமாக இருந்திருக்கக் கூடும்.

ஆனால் “பேர்க்” தலைவர் பதவியிலிருந்து ராஜன் விலகுவது குறித்து கொழும்பில் கூறப்படும் காரணங்கள்—

தேர்தலுக்கு முன்னர் இருந்த சந்திரிகாவாக அன்றி, தமிழர் விவகாரத்தை அணுகுவதில் இப்போது முற்றாக வேறு போக்குடையவராக ஜனாதிபதி மாறிவிட்டாரா என்ற கேள்வியையே எழுப்பிநிற்கின்றன!

# ஆயுதக் களஞ்சியத்தில் தூங்கும் ‘அசோல்ட்’ரக இயந்திரதுப்பாக்கிகள்

கொழும்பு, டிச. 31

தரைப்படைகளின் பாவனைக்கென பல ஆண்டுகளுக்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான ‘அசோல்ட்’ ரகத்தைச் சேர்ந்த ரைபிள்கள் ஆயுதக்களஞ்சியத்தில்‘ தூங்குகின்றன’ என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய இராணுவ நடவடிக்கையில் இந்த ரக ஆயுதங்களை படையினரால் பாவிக்க முடியாதிருப்பதே ஆயுத களஞ்சியத்தில் உள்ளமைக்குக் காரணம் ஆகும்.

தற்போது நடைபெறும் யுத்தத்துக்கு இந்த வகையான ஆயுதங்கள் உகந்தவையாக இல்லாத காரணத்தால் ரி-56 ரக துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டு படையினருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது படையினர் ரி–56 ரகத் துப்பாக்கிகளை யுத்தத்துக்கு பயன்படுத்தப் பழகி விட்டதால், ஆயுதக் களஞ்சியத்தில் உள்ள ‘அசோல்ட்’ வகை துப்பாக்கிகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது,

வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள பாதுகாப்புப் படையினருக்கும் —

பெரிய மோதல்கள் இடம் பெறாத பகுதிகளில் காவலில் உள்ள படையினருக்கும் —

இந்த வகை ஆயுதங்களை வழங்குவது தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் திட்டங்களை வகுத்துவருகின்றன.

தகுதியற்ற ஆயுதங்களையும், யுத்த தளபாடங்களையும், வெடி மருந்துகளையும் கொள்வனவு செய்யும் செயல் கடந்த காலங்களில் மட்டுமல்ல இப்போதும் நடக்கத்தான் செய்கிறது என்று சுட்டிக்காட்டப் படுகிறது.

(இ-150-3)

## தென்மராட்சி மாதாந்த உதவிப்பணம்

தென்மராட்சி டிச. 31

தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவு பிரதேச செயலக சமூக சேவைப் பகுதியினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவும் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

(இ-117)

## படையில் மீண்டும் சேர்ந்து 13 ஆம் நாளில் மரணம்

கொழுமபு, டிச. 31

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய சிப்பாய் ஒருவர் ஒன்றரை வருடத்தின் பின்னர் மீண்டும் இராணுவத்தில் சேர்ந்து 13 ஆவது நாள் மின்சாரத்துக்குப் பலியானார்.

வவுனியா - பூவரசங்குளம் பங்கர் ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது,

முதியான் சலாகே ரஞ்சித் என்ற 22 வயது சிப்பாயே இறந்தவராவார். (இ-3)

## மாங்கன்று விநியோகம்

வலி. தென் மேற்கு டிச. 31

சண்டிலிப்பாய் பிரதேச செயலக காரியாலயத்தினால் மாங்கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

பிரதேச செயலக பணத்தில் நல்ல இன மாங்கன்றுகள் பெறப்பட்டு மானிய அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்றன. (இ-145)

## கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் விவசாய பீடம் இயங்கும்

யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் வன்னியில் கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் விரைவில் இயங்கவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக பேரவை நேற்று முன்தினம் கூடியசமயம் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தப் பீடமாணவர்களுக்கான கற்கை நெறிகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரிப்பட்ட முறிப்பு, மாங்குளத்தில் இருந்து 6 மைல் தூரத்தில் உள்ளபகுதி ஆகும்

(இ-3)

## பொது விடுமுறை தினங்களில் கிளினிக் நடைபெறாததால் நோயாளர்கள் பெரும் சிரமம்

தென்மராட்சி, டிச.31

அரச ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் டாக்டர்கள் பொது விடுமுறை தினங்களில் கடமையாற்றுவது வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நிறுத்தப்பட்டதால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரிகளில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் கிளினிக்குகள் நடத்தப்பட்டு வந்தன.

பொதுவிடுமுறை வரும் வேளைகளில் அன்றையதினத்தில் சிகிச்சை பெறமுடியாத நிலை நோயாளர்களுக்கு ஏற்படுகிறது.

அடுத்தவாரம் அதே தினத்தில் நடைபெறும் கிளினுக்குகளுக்கு இரட்டிப்பு மடங்கு நோயாளர்கள் வரும் வேளையில் டாக்டர்களால் சிகிச்சையளிக்க முடியாமல் [illegible]மெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பொது மருத்துவ கிளினுக்குகளில் 15 நாள்களுக்கு ஒருமுறை சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள், கிளினிக் நாள்கள் விடுமுறை தினமாக இருப்பின் சிகிச்சை பெற மேலும் 15 நாள்களுக்கு காத்திருக்கவேண்டி ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## நாளை

**மார்கழி 17**

புதன்கிழமை

**திதி:** ஸப்தமி

பிற்பகல் 3.15 வரை.

**நட்சத்திரம்:** உத்தரம்

பிற்பகல் 1. 06 வரை.

**ராகுகாலம்:** 12.29 - 1.59

**சுபநேரம்:** 4.59 - 6.29

([illegible] பழைய நேரப்படி)

## உருளைக் கிழங்கு நடுகை

வலி தென்மேற்கு டிச. 31

விதை உருளைக்கிழங்கைப் பெற்றவர்கள் அதனை நடுகை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(இ-145)

## பொருள்களைக் கூடிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்படும் பொருள்கள் குறைவது குறித்து நீங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் தொடர்பாக —29 - 12 - 96 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக— பருத்தித்துறைத் துறைமுகத்தில் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களும் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் மிகவும் மனம் நொந்த நிலையில் உள்ளனர். இவ்விடயத்தையிட்டுத் தங்களுக்குச் சில விளக்கங்களை ஏற்கனவே தெரிவித்தபொழுதும், பொதுமக்களுக்கு உண்மை நிலையினை இப்போது தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இது தொடர்பாக இவ் விவரங்களைத் தங்களுக்கு மீளத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் பொருள்கள் கொண்டுவரும் நடைமுறை கடந்த ஆறு வருடங்களாக நடைபெற்று வரும் நடைமுறையாகும். இது கடந்த ஆறு மாத காலமாக மாத்திரம் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் புதிய ஒரு நடவடிக்கை அல்ல. இவ்வாறு பொருள்களைக் கொண்டு வரும் போது ஏற்றப்பட்ட பொருள்கள் தொடர்பாக, பொதியிடப்பட்ட பொருள்கள் தொடர்பாக, தமக்காக பொதியில் குறிப்பிடப்பட்ட குறியீடு இல்லாத தன்மையிலேயே இங்கு பொருள்களைப் பெறுவதற்கு வர்த்தகர்கள் முயற்சி செய்வதும், பெற்றுக் கொள்வதும் தாங்களும், வர்த்தகர்களும் அறிந்த ஒன்றேயாகும்.

### உடனுக்குடன் மாற்று நடவடிக்கை

பொருள்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வருவது தொடர்பாக, சகல வர்த்தகர்களுக்கும் பலமுறை தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் பருத்தித்துறை துறைமுகத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் கடும் முயற்சி காரணமாக, கடந்த காலங்களில் மிகவும் குறைந்த சேதாரமான பொருள்களே வர்த்தகர்களிடம் கையளிக்கப்பட்டன. எவ்விதமான முறைப்பாடுகளும் பாரியளவில் எமக்குக் கிடைக்கவில்லை. கிடைக்கும் முறைப்பாடுகள் உடனுக்குடன் விசாரிக்கப்பட்டு, எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது கப்பல் மூலம் பொருள்களைக் கொண்டு வருகின்ற வர்த்தகர்களுக்கும், ப. நோ. கூ. சங்கங்களுக்கும், வர்த்தகத் திணைக்களத்திற்கும், தங்களுக்கும் தெரிந்த ஒரு விடயமாகும்.

மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர், தனிப்பட்ட வர்த்தகர்களினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் சிலவற்றிலிருந்து, காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கப்பட்ட பொழுது, எமது சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்களினால் பல பொருள்களுக்குச் சேதாரம், குறைவு என்பன ஏற்பட்டன. அப்பொழுது நிலைமையை நன்கு விளங்கிய வர்த்தகர்கள் இதனைப் பெரிதுபடுத்தவில்லை. கப்பலில் பொருள்களுக்கு ஏற்படும் குறைவுகளை காரணம் காட்டி சில வர்த்தகர்கள் பொருள்களின் சந்தை விலைகளை அதிகரித்தமையும், இது தொடர்பான நிலைப்பாட்டை அறிவதற்காக, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ். செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் தங்களுக்கு பூரணமான விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

அவற்றில் 1. உரிய ஆவணங்கள் வர்த்தகர்களிடம் இல்லாமை, 2. பொதி செய்யப்பட்ட சாக்குகள் தரமின்மை காரணமாக ஏற்பட்ட சேதங்கள், 3. கடதாசிப் பெட்டிகளில் வரும் பொருள்கள், கடதாசிப் பெட்டிகள் உடைவதனால் பெட்டிக் கணக்காகக் கையளிக்க முடியாமை, 4. உடைந்தபெட்டிகளில் உள்ளிருக்கும் பொருட்கள் முழுமையாக இல்லாமை என்பன பற்றி தங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை பூரணமாக தங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக பருத்தித்துறை துறைமுகத்திற்கு வர்த்தக சங்கப் பிரதிநிதி ஒருவரை நாள் தோறும் அனுப்பி வைக்கும் படியும், வர்த்தகர்கள் துறைமுகத்திற்கு வந்து பொருள்கள் இறங்குவதை மேற்பார்வை செய்து, பொருள்களைப் பெறும்படியும் ஆலோசனை கூறப்பட்டது. அந்த ஆலோசனைப்படி கடந்த இரண்டு மாதங்கள் சிறந்த முறையில் தாங்களும், வர்த்தகர்களும் செயற்பட்டு வருவதுடன், இந்நிலையில் கடந்த 01-11-96 ஆம் திகதி அஸ்ரோரியா, 20-09-96 ஆம் திகதி டொனாகுழி, 27 - 09 - 96 ஆம் திகதி குமணா, 19 - 08 - 96 ஆம் திகதி றீயூனியன், 29-10-96 ஆம் திகதி மாகோ ஆகிய கப்பல்களில் கொண்டுவரப்பட்ட பொருள்கள் அனைத்தையும் தாம் சரியாகப் பெற்றுக்கொண்டதாக, பொருள்கள் கப்பல் மூலம் கொண்டுவந்த வர்த்தகர்கள் எழுத்து மூலமான ஒப்புதலைத் தந்துள்ளனர்.

### துரதிர்ஷ்டமானது

இந்நிலையில் அரசாங்க அதிபரும், செயலகமும் பொருள்களைச் சரியான முறையில் தங்களிடம் கையளிப்பதில்லை என்ற தொனியில், பொருள்களைக் கூடிய விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்ற சில வர்த்தகர்களின் தூண்டுதலின் அடிப்படையில் மகஜரை அனுப்புவதும், பத்திரிகை மூலம் பொதுமக்களுக்குப் பிழையான தகவல்களைக் கொடுக்க முனைவதும், இக்கட்டான சூழ்நிலையில் மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

மேலும் 26 - 12 - 96 ஆம் திகதி தங்கள் சங்கப் பிரதிநிதிகள், ஆங்கில மருந்து விற்பனையாளர் சங்கம் ஆகியன தற்போதுள்ள அவல நிலை பற்றி அரசாங்க அதிபரை நேரடியாகச் சந்தித்து அவற்றுக்குச் சாதகமான ஒரு தீர்மானத்தைப் பெற்ற சந்தர்ப்பத்தில், பொருள்கள் கொண்டு வருவதில் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப் படவேண்டி இருக்கின்றன என்பதனை அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வராதது மிகவும் துரதிர்ஷ்டவசமானதும், உண்மை நிலையைத் தாங்கள் உணராததும் ஆகும் — என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்
ஏசாயா 43:19

# எபநேசர் ஜெப ஆலயம்

(வட்டுக்கோட்டை)

## புதுவருட விழிப்பு இரவு ஆராதனை

இன்று மாலை 6.00 மணி முதல் நாளை காலை 6.00 மணி வரை ஆண்டவரின் பாதத்தில் அமர்ந்து இருந்து புதிய வருடத்துக்குள் ஆசீர்வாதத்துடன் பிரவேசிக்க, வாழ்க்கையில் அமைதி நிலவ, நம் நாட்டில் சமாதானம் மலர ஆண்டவரிடத்தில் வேண்டுதல் செய்து புது வருடத்துக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இத்துடன் அனைத்து சபை போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் யாவருக்கும் எமது புது வருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

**போதகர், ஊழியர்கள், விசுவாசிகள்.**

(44420)



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# கலைப்பீடம்

## கல்வி ஆண்டு 1994/95
## கல்வி ஆண்டு 1995/96

கீழே தரப்பட்ட பரீட்சைகள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளன. எனவே இப்பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடமிருந்து 1997 - 01 - 15 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| முதற்கலைத் தேர்வு | — 1995 |
| முதற்கலைத் தேர்வு | — 1996 |
| முதல் வர்த்தகத் தேர்வு | — 1995 |
| முதல் வர்த்தகத் தேர்வு | — 1996 |
| முதல் முகாமைத்துவத் தேர்வு | — 1995 |
| முதல் முகாமைத்துவத் தேர்வு | — 1996 |
| முதலாண்டு நடனமாணித் தேர்வு | — 1995 |
| முதலாண்டு நடனமாணித் தேர்வு | — 1996 |
| முதலாண்டு சங்கீதமாணித் தேர்வு | — 1995 |
| முதலாண்டு சங்கீதமாணித் தேர்வு | — 1996 |
| முதலாண்டு நடனமணித் தேர்வு | — 1995 |
| முதலாண்டு நடனமணித் தேர்வு | — 1996 |
| முதலாண்டு சங்கீதமணித் தேர்வு | — 1995 |
| முதலாண்டு சங்கீதமணித் தேர்வு | — 1996 |

**- பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
30-12-1996

(சி/3824)



# விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள (மொறிஸ் ஒக்ஸ்போட்) 8 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய காரும், (Italy make) 9 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய வெஸ்பா ஸ்கூட்டரும், புதிய (சைஸ் 15) நீர் இறைக்கும் இயந்திரமும், நல்ல நிலையிலுள்ள (340) டெக்கும், 24'' National கலர் T.V. யும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**அம்பாள் மருந்தகம்,**
**இல. 1, நவீனசந்தை,**
**சாவகச்சேரி.**

(3826)



# கலை வட்டக் கருத்தரங்குத் தொடர்

## இராஜபுத்திர ஓவியங்கள்

**திரு. கோ. கைலாசநாதன்**

இடம்: பொருளியல் மண்டபம்
காலம்: 01-01-1997 பிற்பகல் 2-00 மணி

**நுண்கலைத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

அன்பளிப்பு;

**V. S. B. குறூப்,**
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(44 424)



உ

**சாவகச்சேரி நகர்**

# பாரதி பாலர் கழகம்

பாலர் வகுப்பு மாணவர்களுக்கான புதிய அனுமதி ஜனவரி **1** ஆம் திகதி தொடக்கம் **10** ஆம் திகதி வரை காலை **9** மணி முதல் **10** மணிவரை விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அனுமதி வரையறை செய்யப்பட்டுள்ளது)

**இயக்குநர்சபை,**
தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியம்,
இலங்கை வங்கி வீதி,
சாவகச்சேரி.

(44421)


# கிட்டுவின் தாயார் காலமானார்

வவுனியா, டிச. 31

விடுதலைப் புலிகள் பிரமுகர் காலஞ்சென்ற கிட்டுவின் தாயார் திருமதி சதாசிவம் இராசலட்சுமி தனது 70 ஆவது வயதில் கடந்த சனிக்கிழமை மல்லாவியில் காலமானார்.

அவரது ஈமக்கிரியைகள் நேற்று மல்லாவியில் நடைபெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

# அரசு நேர்மையுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அவர் சொன்னதாவது:-

இன்றுள்ள நிலையில் சமாதானம் தொடர்பாக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி அளிக்கும் என நான் நினைக்கவில்லை.

அரசாங்கம் பதவிக்கு வந்ததும் நேர்மையான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பின் தீர்வுத் திட்டமொன்றினை அப்பொழுதே முன் வைத்திருக்கலாம். ஆனால் அரசு தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்காது விடுதலைப் புலிகள் அமைப்பை ஏமாற்றும் முயற்சியில் ஈடுபட்டது.

இதனால் மீண்டும் யுத்தம் ஆரம்பமானது. யுத்தம் ஆரம்பித்த பின்னர் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்து மாதக் கணக்கில் இழுத்தடித்து வருகிறது.

இறுதியில் டக்ளஸ் தேவானந்தாவால் கூட ஏற்றுக் கொள்ள முடியாத கதி அந்தத் தீர்வுத் திட்டத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந்தத் தீர்வுத் திட்டத்தை வீசி எறிந்து விட்டு முன்னர் நடைமுறையில் இருந்த மாகாண சபையையாவது தாருங்கள் என டக்ளஸ் தேவானந்தா கேட்கும் நிலை உருவாகியுள்ளது.

அரசாங்கத்தின் சீடரான டக்ளஸ் தேவானந்தாவின் நிலை இதுவானால் விடுதலைப் புலிகளை அரசால் எவ்வாறு திருப்திப்படுத்த முடியும்?

நிலைமை இவ்வாறு இருக்கும்போது, விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்பது நம்பமுடியாத ஒன்றாகும்.

அரசாங்கத்திடம் தீர்வுத் திட்டம் ஒன்று இருப்பினும் அதை நடைமுறைப்படுத்தும் சக்தி அதற்கு இல்லை. அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதாகத் தெரிவித்த அரசு தற்போது மக்கள் கருத்துக் கணிப்பு எனக் கதை கூறுகிறது.

இவ்வாறான புருடாக்கள் மூலம் தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்ற முடியாது. இதனால் பகைமை வளரும். அவர்களது முற்போக்குப் போராட்டம் தீவிரமடையும்-

முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராட வடபகுதி இளைஞர்களைப் போலவே தென்பகுதி இளைஞர்களும் ஒன்றுபடவேண்டும் — இவ்வாறு அவர் சொன்னார். (அ-10)

## தாவடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ வட்டாரங்கள் அறிக்கை வெளியிட்டன —

அந்த அறிக்கை வருமாறு:-

1996 டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி தாவடிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் மேலும் இரு அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அப்பகுதியில் பாதுகாப்புப் படையினரை தாக்கும் நோக்கில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட கிளைமோர் கண்ணிவெடி வெடித்ததாலேயே இப் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் தாவடிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும்போது அவர்களைப் படுகொலை செய்வதற்காக விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட ''கிளைமோர்'' ரக குண்டு ஒன்று வெடித்தபோது பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர். இந்தக் குண்டு வெடிப்பின் போது தங்கள் நாளாந்தக் கடமைகளின் நிமித்தம் அவ்வழியாகச் சென்ற அப்பாவிப் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் காயங்களுக்கும் உட்பட்டனர்.

காயமடைந்த பொதுமக்கள் பாதுகாப்புப் படையினரால் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இதற்கு முன்னரும் விடுதலைப் புலிகளால் இதே போன்ற படுகொலைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு ''கிளைமோர்'' ரகக் குண்டுகளை வெடிக்க வைத்ததன் மூலம் இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் பாடசாலை மாணவர்கள் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல பொதுமக்கள் படுகொலைக்கு ஆளாக நேரிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தாவடிப் பிரதேச மக்கள் விடுதலைப் புலிகள் மீது கடும் வெறுப்புற்றுள்ளனர். விடுதலைப் புலிகள் பொது மக்களின் கடும் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ளனர். பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் சாட்டில் இவ்வாறு ஏதுமறியாத் தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் என்ன நோக்கத்தில் படுகொலை செய்கிறார்கள் என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-5)

## யாழ்...

பொறுப்பான அரசாங்க அதிபர்களுக்கும் இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

''யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் போதிய பாதுகாப்பை வழங்க முடியாமல் இருக்கிறது. விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் காரணமாக படையினர் பலியாகி வருகின்றனர். இதனால் சாதாரண பொது மக்களுக்கு — அகதி நிலையில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு — இராணுவத்தால் பாதுகாப்பு வழங்க முடியாமலுள்ளது.

''புலிகள் தாக்கி விட்டுச் சென்ற பின்னர் இளவயதினர் இராணுவத்தினரால் கைது செய்யப்படுகின்றனர். மேலும் யாழ்ப்பாணம் சென்ற பின் எந்தவொரு அவசர வேலைக்காவது வவுனியா வர வாய்ப்புக்கள் இராது. எம்மில் சிலர் மருத்துவ சிகிச்சை பெறுகின்றார்கள், மேலும் சிலர் பரீட்சைகளுக்கு தயாராகி வருகிறார்கள். இப்படியானவர்கள் யாழ்ப்பாணம் சென்றால் அவர்கள் வெளியே வருவது கஷ்டம்'' என வவுனியாவிலுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஊழியர்கள் மற்றவர்களுக்கு தங்களால் வழங்கப்படும் சேவைகளிலும் பார்க்க தங்களது பாதுகாப்புக்கே முன்னுரிமை வழங்குகிறார்கள்.

மேலும் இந்த அரச ஊழியர்களால் தொழிற் சங்க ரீதியில் கோரிக்கைகளை முன்வைக்கவோ அல்லது போராடவோ முடியாமலுள்ளது.

காரணம் அவர்கள் சார்ந்த தொழிற் சங்கங்களும் யாழ்ப்பாணத்திலேயே செயற்படுகின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-11)

# மரண அறிவித்தல்கள்

## இலங்கையர் அருமைநாயகம்

(பிரபல வர்த்தகர்)

மாகியம்பதியைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலில் வசித்தவருமாகிய இலங்கையர் - அருமைநாயகம் அவர்கள் 29-12-96 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. க. இலங்கையர் - காலஞ்சென்ற திருமதி இலங்கையர் உருக்குமணி அவர்களின் செல்வப்புதல்வனும், அ. சத்தியசுலோசனா (டல்சி) அவர்களின் அன்புக் கணவரும், அன்ரன் அஜந்தராஜ் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை), அன்ரனீற்றா, கிருசலீன் அனிற்றா, அனோஜலினா (மாணவிகள், உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற இலங்கைநாயகம், காலஞ்சென்ற பேரின்பநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரசின்பமதியின் (செல்வி) மைத்துனரும், கிருஷாலினி, ஜெயகாந் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 31-12-96 முற்பகல் 10.00 மணிக்கு உடுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்,**
உடுவில், மகளிர்கல்லூரி மேற்கு வீதி,
உடுவில், சுன்னாகம்.

(சி/3825)

## P. J .E. றோசாரியோ
## (அரியராசா)

(ஆங்கில ஆசிரியர், யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்)

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இல. 15 டேவிட் வீதி இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**யோண் பத்திநாதர்.**
(சகோதரன்)
15, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

(44428)

**மேலும் மரண அறிவித்தல்கள்**
**2 ஆம் பக்கத்தில்**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org